செய்தி வெளியீடு எண்:841 நாள்:05.10.2021

# செய்தி வெளியீடு

## கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ரூ.97.49 இலட்சம் மதிப்பீட்டிலான கலையரங்கம், விளையாட்டு திடல் மற்றும் பூங்காவை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (5.10.2021) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.97.49 இலட்சம் மதிப்பீட்டிலான கலையரங்கம், மைதானம் மற்றும் பூங்காவை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், எவர்வின் பள்ளியில் தற்காலிகமாக செயல்படவுள்ள அரசு கலைக் கல்லூரிக்கான கட்டடங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்பியம், ரங்கசாயி தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.15.31 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். மேலும், மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி, ஆசிரியர்களுக்கு சிறப்பு செய்து, பாராட்டினார்.

அடுத்து, செம்பியம், பார்த்தசாரதி தெருவில் ரூ.26.18 இலட்சம் செலவில் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், இறகு பந்து மைதானம் உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு திடலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணப் பொருட்கள் மற்றும் கல்வி உதவித் தொகை, தொகுதி மக்களுக்கு மருத்துவ உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மூன்று சக்கர

மோட்டார் வாகனங்கள், தள்ளுவண்டிகள், காதுகேட்கும் கருவிகள், மீன்பாடி வண்டிகள், என 48 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கொளத்தூர், எவர்வின் பள்ளியில் தற்காலிகமாக அமையவுள்ள அரசு கலைக் கல்லூரிக்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், திரு.வி.க. நகர், 5-வது தெருவில் 7,500 சதுர அடி பரப்பளவில், ரூ.56 இலட்சம் செலவில் செயற்கை நீரூற்று, சிறுவர் விளையாட்டு கருவிகள், யோகா கூடம், நடைபாதை வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மு. கருணாநிதி பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சிகளில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கலாநிதி வீராசாமி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9